# உண்மையான பெத்தானியாக்கள்
## சபையைப்பற்றிய கர்த்தருடைய எண்ணம்

Translated from the original article, “True Bethanies”

By *T.Austin-Sparks*

அப்போஸ்தலர் நடபடிகளின் முதல் அதிகாரத்தில் உள்ள மேலறை பெத்தானியாவுக்கு ஒத்திருக் கிறது; பெத்தானியா மேலறைக்கு ஒத்திருக்கிறது. (பெத்தானியா என்றால் “அத்திப்பழுங்களின் வீடு” என்று பொருள்). கர்த்தருடைய உதவியால், இந்த எண்ணத்தை நாம் விவரமாகப் பார்க்கப்போகி றோம். ஆதியில் கர்த்தரிடம் ஓர் ஆசை இருந்தது, அந்த ஆசை, கடைசியில், நிறைவேறிவிட வேம் டும். இந்தக் கருத்துதான் இப்போது நமக்குமுன் இருக்கிறது. சரி, அது என்ன ஆசை? ஆரம்பத்தில் அவர் தம் பிரசன்னத்தால் ஒரு காரியத்தைக் கட்டியமைத்தார்; அது, ஆவிக்குரியரீதியில், தம் மக்களில் இருக்க வேண்டும் என்பதே அவருடைய ஆசை. “கர்த்தருடைய குறிக்கோள் என்னவென்று ஒரு வார்த்தையில் சொல்லுங்கள்,” என்று யாராவது என்னிடம் கேட்டால், “பெத்தானியா,” என்று நான் சொல்வேன். இதை நான் அடையாளரீதியில் பேசுகிறேன்.

ஏனென்றால், பெத்தானியா கர்த்தருடைய எண்ணத்திற்கு முழுவதும் ஒத்திருக்கிறது. காரியங்களுக்கு பெத்தானியாதான் ஆதாரமாக இருக்க வேண்டும் என்றும், காரியங்கள் பெத்தானியாவுக்கேற்ப கட்டி யமைக்கம்பட வேண்டும் என்றும், ‘பெத்தானியாக்கள்’ அவருடைய உலகளாவிய சபையின் உள்ளூர் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார்.

பெத்தானியா என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ள ஏழு இடங்களை நாம் இப்போது பார்ப்போம்.

### கர்த்தர் கண்டுகொள்ளப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்படுகிறார்

லூக்கா 10:38. *“பின்பு, அவர்கள் பிரயாணமாய்ப் போகையில், அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார்* (கிராமங்கள் சபைகளுக்கு அடையாளங்கள் என்பதை மறக்க வேண்டாம்). *அங்கே மார்த்தாள் என்ற ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள்.* (அந்த வீடு இப்போது யாருடையது என்றும், அந்த வீட்டின் தலைவர் யார் என்றும் உங்களுக்குத் தெரியும்). *அவளுக்கு மரியாள் என்னம்பட்ட ஒரு சகோ தரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள். மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத் தில் வந்து...*”

பெத்தானியா என்ற வார்த்தை முதன்முதலாக இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. கர்த்தர் தம் இரு தயத்தை ஒரு சபையின்மேல், ஒரு கூடுகையின்மேல், ஒரு வீட்டின்மேல், வைத்திருக்கிறார்; அந்த சபை யின் அடையாளமாக இருக்கிற ஒன்றிரண்டு காரியங்களை நாம் இங்கு பார்க்கிறோம். இங்கு ஒரு வார்த்தை முக்கியமாகத் தோன்றுகிறது: “*அங்கே மார்த்தாள் என்ற ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொம் டாள்.*” “*ஏற்றுக்கொம் டாள்*” என்ற வார்த்தைதான் இந்த முழு விஷயத்துக்கும் திறவுகோல் போன்ற மிக முக்கியமான வார்த்தையாகும். இந்த வார்த்தை இங்கு ஒரு மாபெரும் வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. இந்த வார்த்தை வேறுபாட்டை ஏற்படுத்துகிற வார்த்தை; இந்த வார்த்தை வித்தி யாசத்தை ஏற்படுத்துகிற வார்த்தை.

கர்த்தர் மகிமையைவிட்டுப் பூமிக்கு வந்தபோது, “*அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக் குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை,*” (யோவான் 1:11) என்று கூறப்பட்டிருப்பது நம் நினைவுக்கு வருகிறது. அவர் தம்மைப்பற்றிக் கூறும்போது, “*நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை,*” (லூக்கா 9:58) என்று கூறினார்; இது நமக்குத் தெரியும். முதலாவது இது யாரைப்பற்றிப் பேசுகிறது என்பதையும், இரண்டாவது, பேசுகிறவர் யார் என்பதையும் நாம் தியானிக்க வேண்டும்; அப்போதுதான் அதின் உண்மையான அர்த்தத்தை நாம் நிஜமாகவே பார்ப்போம்; பார்த்துத் திகைத்துவிடுவோம். இவர் எல்லா வற்றையும் சிருஷ்டித்தவர்; எல்லாவற்றுக்கும் சொந்தக்காரர்; வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவர்; இந்தப் பிரபஞ்சத்தில் மற்ற எல்லாரையும்விட எல்லாவற்றின்மேலும் அதிக உரிமையுடைய கர்த்தர்;

இவருக்காகவும், இவர்மூலமாகவும்தான் எல்லாம் உண்டாக்கப்பட்டன; இப்படிப்பட்டவர் பூமிக்கு வந்தார். அவர் வந்தபோது, அவரே சிருஷ்டித்த உலகத்தில், அவருடைய இறையாம் மையுள்ள உரிமைகளின் மண்டலத்தில், அவர் தலைசாய்ப்பதற்கு அவருக்கு இடம் கிடைக்கவில்லை. அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய சொந்தக்காரர்கள் அவரை ஏற்றுக்கொள்ளாததோடு மட்டுமின்றி, "*இவன் சுதந்தரவாளி; இவனைக் கொன்று, இவன் சுதந்தரத்தைக் கட்டிக்கொள்வோம் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு, அவனைப் பிடித்து திராட்சைத் தோட்டத்திற்குப் புறம்பே தள்ளி கொலை செய்தார்கள்*" (மத். 21:38-39). அவரிடத்தில் அவர்கள் இப்படிப்பட்ட மனப்பாங்குதான் கொண்டிருந்தார்கள்.

ஆனால், இங்கு, "*மார்த்தாள் என்ற ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள்,*" என்று நாம் வாசிக்கிறோம். "என் சபை." "என் சபை." சபை அவருடைய ஆவிக்குரிய வீடு; சபையே அவரை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுகிற, அவர் இளைப்பாறுகிற இடம். அது அவருடைய இடம். அவரைப் புறக்கணிக்கிற இந்த உலகத்தில், அது அவருடைய இடம். அது அவர் கண்டுகொள்ளப்படுகிற இடம். சபைகள் பூமியெங்கும் சிதறுண்டுபோகும்போது, எப்போதுமே அதுதான் ஒரு சபையின் ஆரம்பம் என்பதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? அவர்கள் வார்த்தையை "*ஏற்றுக்கொள்கிறார்கள்.*" அதுதான் பெந்தெகொஸ்தே: "*அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள்...*" (அம். 2:41). பிலிப்பி பட்டணத்தில், "*லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவளுடைய இருதயத்தைத் திறந்தருளினார். அவளும், அவளுடைய வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு, அவள் எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்*" (அப். 16:14-15). அதுதான் சபையின் ஆரம்பம். எங்கும் அப்படித்தான் இருக்கிறது. முதலில் ஆவிக்குரிய உணர்வு. அதன் விளைவாக திறந்த இருதயத்தோடு ஏற்றுக்கொள்கிறாள். "*ஏற்றுக்கொள்ளுதல்...*" இதுதான் அவருடைய சபையின் முக்கியமான பகுதிகளின் முதல் காரியம். இது அவருக்கு ஓர் இடத்தை, கனத்துக்குரிய ஓர் இடத்தை, கொடுப்பதாகும்.

இப்போது அது மிக எளிமையாக இருக்கிறது. ஆனால், கர்த்தரைப் பொறுத்தவரை இது பெரிய காரியம். இது நம்மை நீண்ட தூரத்துக்குக் கொண்டுசெல்லும். ஏனென்றால், இது கர்த்தர் நம்மிடையே வெறுமனே ஓர் அந்நியரைப்போல் சஞ்சரிக்க வருகிற காரியம் அல்ல; இது அதைவிட அதிகமான காரியம். இது, கர்த்தர் கால் வைப்பதற்காக ஓர் இடம், ஒரு பாதபடி, ஓர் ஆதாரம், கிடைத்துவிட்டது என்பதற்கு அடையாளம். பிரபஞ்சம் முழுவதும் அவர் தம் உரிமைகளை நிலைநாட்டுவதற்குத் தேவையான தளத்தை இது அவருக்கு வழங்குகிறது. இதை நான் விளக்கிச்சொல்ல விரும்புகிறேன்.

2 சாமுவேல் 15ஆம் அதிகாரத்திலுள்ள சோகக் கதை உங்களுக்குத் தெரியும். அப்சலோம் அதிகாரத்தைப் பறித்துக்கொண்டு, தாவீதை விரட்டிவிட்டான். இது ஒரு பரிதாபமான கதை. தாவீது அவனுடைய அரம் மனையிலிருந்து துரத்தப்பட்டான். அவன் தன் உரிமைகளையெல்லாம் விட்டுவிட்டு ஓட வேண்டியிருந்தது. அப்போது, ஒரு சிலர் அவனோடு சென்றார்கள். ஆசாரியனாகிய சாதோக் தேவனுடைய உடன்படிக்கைம்பெட்டியை அவனோடு கொம் டுசென்றான். ஆனால், தாவீது சாதோக்கை நோக்கி, "*தேவனுடைய பெட்டியை நகரத்திற்குத் திரும்பக்கொண்டுபோ. கர்த்தருடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நான் அதையும் அவர் வாசஸ்தலத்தையும் பார்க்கிறதற்கு, என்னைத் திரும்ப வரப்பண்ணுவார்,*" என்று கூறினான் (வ. 25). இதன் பொருள் என்னவென்றால், "நான் திரும்பிவரும்போது, என்னைப் புறக்கணித்த நகரத்தில் என்மேல் இரக்கம் கொண்ட மக்கள் இருப்பார்கள். அவர்களிடத்தில் நான் திரும்பிவருவேன். நான் ஒரு வழிப்போக்கனாகத் திரும்பிவர மாட்டேன். நான் வெறுமையான ஒன்றிற்குத் திரும்பிவர மாட்டேன். நான் திரும்பிவரும்போது எனக்கு வீடில்லாமல் போகாது. என்னுடன் ஒன்றாக இருக்கிற ஏதோவொன்றிடம் நான் திரும்பிவருவேன். சாதோக், நீ என்னுடன் ஒன்றாக இருக்கிறாய். ஆம், நீ என்னுடன் வர விரும்புகிறாய். இது பரிபூரணமான பரிவிரக்கம். இப்போது நீ நகரத்திற்குத் திரும்பிப் போ. நான் திரும்பி வரும்போது என்னுடன் ஒன்றாக இருக்கிற, எனக்குச் சொந்தமான, ஏதொவொன்றிற்கு நான் திரும்பி வருவேன்."

அதுதான் இங்கு கோட்பாடு. கர்த்தருக்குத் தேவையான ஒன்றை சபை வழங்குகிறது. அதில் அவர் இப்போது தம் ஆவியால் இருக்கிறார். அவரைப் புறக்கணிக்கும் இந்த உலகத்தில் அவர் தம் பாதத்தை வைக்க அவருக்கு ஓர் இடம் இருக்கிறது என்று இது பறைசாற்றுகிறது. அவர் அதனிடம் திரும்பி வரு கிறார். அவருக்காக இருக்கிற ஏதோவொன்றிடம் அவர் திரும்பி வருவார்; அது அவருக்காக இருப்ப தால், சாதோக் தாவீதுக்காகச் செய்ததுபோல், அவருடைய உலகளாவிய உரிமைகளை ஸ்தாபிப்பதற் குத் தேவையான தளத்தை அது அவருக்கு வழங்கும்.

இந்தக் காரணத்தினால்தான், கூடுகைகளில் அதாவது உள்ளூர் கூடுகைகளில், தம் சபை பூமியெங் கும் இருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். அவருடைய உரிமைகள் மறுக்கப்பட்டு, மறுதலிக் கம்படுகிற இந்த உலகத்தில் இந்தக் கூடுகைகள் அவருடைய உரிமைகளுக்கு சாட்சிகளாகும். "அப கரித்துக்கொண்டவனின் உரிமைகள் அல்ல, மாறாக அவருடைய உரிமைகளே இந்த உலகத்தில மிக உயர்ந்த உரிமைகள்,'' என்று கூற அவைகள் அங்கு இருக்கின்றன. அவை அந்த சாட்சியைப் பராமரிக் கின்றன. அவர் திரும்பிவரும்போது, மறுக்கப்பட்ட, மறுதலிக்கப்பட்ட அந்த உரிமைகளைத் திரும்பப் பெற அவை வழிமுறைகளாக, அதாவது கருவியாக, இருக்கும். கர்த்தரை ஏற்றுக்கொள்வதில் நிறைய காரியங்கள் இருக்கின்றன. அவர் தமக்குச் சொந்தமானவர்களிடம் வருகிறார். ஏனென்றால், அவர் ஏற் கெனவே அவர்களைச் சொந்தமாக்கிக்கொண்டார்.

முடிந்தால், சபையின் உள்ளூர் வெளியாக்கத்தை அழிக்கவேண்டும், அதாவது பரம இணைப்பிலும், ஐக்கியத்திலும் கர்த்தரோடு வாழ்கிற அவருடைய மக்களாலான சிறு கூட்டத்தை, அழிக்கவேண்டும் என்பதில் பிசாசு ஏன் குறியாக இருக்கிறான் என்பதை இப்போது நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள். ஏனென்றால், அது அவருடைய உரிமைகளின் பிரதிநிதியாக இருக்கிறது. அவை அபகரித்துக்கொண்ட வனின் உரிமைகளைத் தம் பிரசன்னத்தால் எல்லா நேரமும் மறுத்துக்கொண்டிருக்கின்றன. அங்கு சாட்சிம்பெட்டி இருக்கிறது. கர்த்தருக்காக சாட்சிப்பெட்டி இருக்கும்வரை, அபகரித்துக்கொண்டவன் உலகளாவிய ஆதிக்கம் செலுத்த முடியாது. அவனுடைய இராஜ்ஜியம் தோற்றுவிட்டது என்பதற்கும், அதற்கு அச்சுறுத்தலாக இருக்கிறது என்பதற்கும், அவனுக்கு நிரந்தரமான முள்ளாக இருக்கிறது என் பதற்கும் சபை ஒரு பிரதிநிதியாக இருக்கிறது என்று அவனுக்குத் தெரியும். எனவே, முடிந்தால், கிறிஸ் துவுக்கேற்றபடியும், அவர் இருக்கிறதுமான அந்த உள்ளூர் வெளியாக்கத்தைத் தணிக்க, உடைக்க, பிளக்க, அகற்ற அவன் என்ன வேண்டுமானாலும் செய்வான். உள்ளூர் பிரதிநிதி என்ற முறையில் சபை அப்படித்தான் இருக்க வேண்டும். இங்கு பூமியில் ஒவ்வொரு விசுவாசியும் அப்படித்தான் இருக்க வேண்டும்; இந்தப் பூமியில் அது கர்த்தர் கால் வைப்பதற்கான ஓர் இடம்; அவருடைய இறையாம் மை யுள்ள கர்த்தத்துவத்திற்கும், உரிமைகளுக்கும் ஒரு சாட்சி. கர்த்தரை ஏற்றுக்கொள்ளுதல் அவருக்கு இம்படிம்பட்ட பாதபடியையும், இப்படிப்பட்ட சாட்சியையும் வழங்குகிறது.

எனவே, பெத்தானியாவைப்பற்றிய முதல் காரியம் மிகவும் முக்கியமானது என்று நாம் பார்க்கிறோம். இது மிக முக்கியமான ஒரு கோட்பாட்டின் அடையாளமாக இருக்கிறது. முதலாவது, கிறிஸ்துவுக்கு ஓர் இடம் கிடைத்துவிட்டது என்ற ஓர் எளிமையான கோட்பாட்டைப் பார்க்கிறோம். எல்லா வகையான புறக்கணிப்புகளின் மத்தியில் அவருக்கு ஓர் இடம் கிடைத்துவிட்டது.

**அவருடைய இருதயம் திருப்தியடைதல்**

இப்போது நாம் அந்தப் பத்தியைத் தொடர்ந்து பார்ப்போம்: "*...அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண் டாள். அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.*'' எழுத்தின்படி சொல்வதானால், "அவள் இயேசுவின் பாதத்தருகே அமர்ந்துகொண்டு, அவருடைய வார்த்தையைக் கேட்டுக்கொம் டே யிருந்தாள்,'' என்றுதான் சொல்ல வேண்டும். "*அவள் அவருடைய பாதத்தருகே அமர்ந்துகொண்டு, கேட்டுக்கொண்டேயிருந்தாள்.*'' இது மார்த்தாளுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. ஏனென்றால், மரியாள் கேட்டுக்கொண்டேயிருந்தாள். மார்த்தாள் மரியாளைப்பற்றி கர்த்தரிடம் என்ன சொன்னாள்? அவள் கர்த்தரிடம் வந்தபோது, "*ஆம் டவரே, நான் தனியே வேலைசெய்யும்படி என் சகோதரி என்னை விட்டு விட்டுப் போய்க்கொண்டேயிருப்பதைக்குறித்து உமக்குக் கவலையில்லையா?*'' என்று கேட்டாள்.

“*என்னை விட்டுவிட்டுப் போய்க்கொண்டேயிருக்கிறாள்.*” ஏனென்றால், “*அவள் கேட்டுக்கொம் டே யிருந்தாள்.*”

இது என்ன? கர்த்தர் எதையோ மிக அதிகமாக விரும்புகிறார்; சபை அதை அவருக்கு வழங்குகிறது. கர்த்தருடைய இருதயம் திருப்தி அடைகிறது என்பதற்கு இது அடையாளம். மரியாள் செய்த காரியத் தில் கர்த்தருடைய இருதயம் திருப்தியடைந்தது. இங்குதான் நாம் பெத்தானியாவின் பொருளைம் புரிந்துகொள்கிறோம். மத்தேயு 21ஆம் அதிகாரத்தில் நீங்கள் அத்திமரத்தின் கதையை வாசிக்கிறீர்கள். இயேசு எருசலேமுக்கும் பெத்தானியாவுக்கும் இடையே அடிக்கடி போய் வந்துகொம் டிருந்தார். அவர் எருசலேமுக்குப் பலமுறை சென்றார். அங்கு தேவாலயத்தில் அநேகக் காரியங்களை அவர் பார்த்தார். அப்போது அவருடைய இருதயம் வேதனைப்பட்டது, ஏமாற்றத்தின் வேதனையினால் துளைக்கப்பட்டது. அவர் தம்மைச் சுற்றியிருந்த எல்லாக் காரியங்களையும் பார்த்தார். அப்போது ஒன்றும் சொல்லாமல், பெத்தானியாவுக்குத் திரும்பிச் சென்றார். காலையிலே அவர் திரும்பிப்போகும் வழியில், அவருக்குப் பசி ஏற்பட்டது; அப்போது ஓர் அத்திமரத்தைப் பார்த்தார். அவர் அதனருகே சென்று, அதில் கனிகள் இருக்கின்றனவா என்று பார்த்தார். அதில் எந்தக் கனியையும் காணாததால், “*இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக்கடவது,*” என்று கூறினார். அவர்கள் திரும்பிவருகையில், “*அத்திமரம் பட்டுப்போய், செத்துப்போயிற்று என்பதை சீடர்கள் கண்டு, அவர்கள் நடந்த சம்பவத்தைச் சுட்டிக்காட்டினார்கள்.*”

அந்த அத்திமரத்திற்கும் எருசலேமுக்கும் அதிகத் தொடர்பு உண்டு என்று நமக்குத் தெரியும். அத்தி மரம், அன்று இருந்த யூதமதத்துக்கு ஓர் அடையாளம். ஆலயத்தில் கர்த்தருடைய இருதயம் அடைந்த ஏமாற்றம், அவர் பசியுடன் அத்திமரத்தினிடம் வந்து, அதில் கனியைக் காணாதபோது அடைந்த ஏமாற் றத்துக்கு ஒத்திருக்கிறது. இந்த இரண்டு காரியங்களும் ஒன்றே. அந்தக் காரியங்களில் அவருக்கு ஈடு பாடு இல்லை. யுகத்தின் எஞ்சிய காலத்தில் யூதமதத்திற்கு எந்த அர்த்தமும் இல்லை. “*இனி ஒருக் காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக்கடவது.*” (ஒருக்காலும் என்பதற்குப் பயன்படுத்தப்பட் டிருக்கும் கிரேக்க வார்த்தையை ‘யுகம் முடியும்வரை’ என்று மொழிபெயர்க்கலாம்). அதனால் அவரைத் திருப்திப்படுத்த முடியாது. அது போய்விட்டது. அது பட்டுப்போன மரம். அது கர்த்தருக்கு எதையும் வழங்காது.

அவர் தம் இருதயத்தில் இவ்வளவு கடுமையான ஏமாற்றத்தை உணர்கிறார்; அந்த ஏமாற்றத்தை “*இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக்கடவது,*” என்று தெரிவிக்கிறார்; அந்த நேரத்தில் அவர் பெத்தானியாவுக்குப் போகிறார். பெத்தானியா என்றால் “அத்திப்பழங்களின் வீடு” என்று பொருள். ஆலயத்திலும் அல்ல, எருசலேமிலும் அல்ல, மாறாக பெத்தானியாவில் கர்த்தர் திருப்தி அடைகிறார். இந்தக் காரணத்தினால்தான் அவர் எப்போதுமே அங்கு சென்றார். விரைத்துப் போன, ஜீவனற்ற, சம்பிரதாயமான மதரீதியான அன்றைய அமைப்பில் அவருடைய இருதயம் திருப்தி அடையவில்லை. மாறாக, பெத்தானியா வீட்டின் ஜீவிக்கிற, துடிப்பான, வரவேற்கும் சூழலில் அவ ருடைய இருதயம் திருப்தி அடைந்தது. அவருடைய வார்த்தைகள் எருசலேமில் புறக்கணிக்கப்பட்ட போது, பெத்தானியா வீட்டில் அவை ஏற்றுக்கொள்ளப்படும் என்றும், அங்கு மக்கள் அவைகளை ஆசையுடன் கேட்பார்கள் என்றும், அவைகளைக் கேட்டுக்கொண்டேயிருக்கிற ஒருவர் எப்போதும் அங்கு இருப்பார் என்றும் அவருக்குத் தெரியும்.

அப்போஸ்தலர் நடபடிகளின் 2ஆம் அதிகாரம் என்னில் ஆழமாகப் பதிந்துவிட்டது. பெந்தெகொஸ் தேக்குப்பின், விசுவாசிகள் “*அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்,*” என்று அது கூறுகிறது (வ. 42). சபை எழும்பியது. அதின் அம்சம் என்ன? “*அவர்கள் அப்போஸ்தல ருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.*” இந்த வார்த்தைகள் நமக்கு மிகவும் பரிச்சய மானவை. எனவே, இதில் ஆழமான எதுவும் இருப்பதுபோல் நமக்குத் தோன்றவில்லை. இதைம் பிரயோகிப்பதற்கு நடைமுறைக்குரிய ஓர் எளிமையான வழியை நாம் இப்போது பார்ப்போம்.

இப்போது நீங்கள் இவைகளை வாசிக்கிறீர்கள். வாசித்து முடித்துவிட்டு உங்கள் போக்கில் போய் விடுவீர்கள். ஒருவேளை, கொஞ்ச நாட்கள் இவைகள் உங்கள் நினைவில் இருக்கக்கூடும். ஒரு குறிப்பிட்ட காலம்வரை. ஒருவேளை, ‘பெத்தானியா’வை இன்னும் கொஞ்சம் அதிகமாகவே நீங்கள்

நினைத்துப்பார்க்கக்கூடும். பெத்தானியா என்று சொன்னவுடன் நீங்கள் வாசித்த சில காரியங்கள் உங்கள் நினைவுக்கு வரலாம். 'இந்தச் செய்தி ஒரு நல்ல செய்தி, சுவாரஸ்யமான செய்தி' என்பது போல் நீங்கள் எதையாவது சொல்லக்கூடும். இதற்கும், "*உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருப்பதற்கும்*" இடையே பெரிய வித்தியாசம் இருக்கிறது! நீங்களே இதை வியாக்கியானம் செய்து, "நான் அதில் உறுதியாய்த் தரித்திருப்பதென்றால் என்ன பொருள்?" என்று உங்களையே கேட்டுப்பார்க்க வேண்டும்.

உண்மையில் அந்த வார்த்தைக்கு "விடாப்பிடியாய் வாழ்தல்" என்று பொருள். "*அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் விடாப்பிடியாய் வாழ்ந்தார்கள்.*" உபதேசத்தில் விடாப்பிடியாய் வாழ்வதற்கும், வெளியே போய், 'ஓ! அது மிகவும் நல்ல செய்தி' என்று சொல்வதற்கும் இடையே பெரிய வித்தியாசம் இருக்கிறது. 'விடாப்பிடியாய் வாழ்தல்' என்பது இருதயத்தை சத்தியத்துக்கு நடைமுறையில், நேர்மறையாக பிரயோகிப்பதைக் குறிக்கிறது. மேலும், எது அவருடைய சபையைக் கட்டியமைக்கிறது? அவரிடமிருந்து வருகிறது எங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு... முழு இருதயம், அதாவது முழு வாழ்க்கை, அதற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறதோ, அங்கு அவருடைய சபை கட்டியமைக்கம்படுகிறது. அங்கு அதற்குக் *கையளித்தல்* இருக்கிறது.

ஒருவேளை, மார்த்தாள் இதைத்தான் விரும்பியிருக்கமாட்டாள். மரியாள் தன்னை வார்த்தைக்குக் கையளித்துவிட்டாள். அவள் தன்னை அதற்கு ஒப்புக்கொடுத்துவிட்டாள். கர்த்தர் அதைத்தான் தேடிக்கொம் டிருக்கிறார். நம்மிடம் வந்த தெய்வீக சத்தியத்தின் ஒவ்வொரு வார்த்தையைக் குறித்தும் நம் மனப்பாங்கு இப்படி இருந்திருந்தால், விளைவு என்னவாக இருந்திருக்கும் என்று நான் நினைத்துப் பார்க்கிறேன். கட்டியெழுப்பப்பட்டிருக்கும் மலைபோன்ற சத்தியத்தை நான் நினைத்துப்பார்க்கும் போது, 'சத்தியத்தைக் கேட்பவர்களில் எத்தனை சதவிகிதம்பேர் உண்மையாகவே அதைத் தங்கள் வாழ்க்கையில் பிரயோகிக்கிறார்கள்,' என்ற கேள்வியை என்னால் கேட்காமல் இருக்க முடியாது. ஆரம்பத்தில் வார்த்தையைக் கேட்டவர்களிடம் வார்த்தையைப்பற்றிய இப்படிப்பட்ட மனப்பாங்கு இருந்ததாலும், அதில் அவர்கள் விடாப்பிடியாய் வாழ்ந்ததாலும், அங்கு வீரியம் இருந்தது. அவர்கள் வார்த்தையைக் கேட்டபின், வெளியே போய், "இன்று பேதுரு என்ன அற்புதமான பிரசங்கம் பண்ணினார்! என்று கூறவில்லை. இல்லை, அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் விடாப்பிடியாய் வாழ்ந்தார்கள்.

அதைத்தான் கர்த்தர் விரும்புகிறார். அதுதான் அவருடைய இருதயத்தைத் திருப்திப்படுத்துகிறது. மரியாள் அவருடைய பாதத்தருகே அமர்ந்து, அவருடைய வார்த்தைக்குச் செவிகொடுத்துக்கொண்டேயிருந்தாள். மற்றவைகளெல்லாம் அவருக்கு ஏமாற்றம் அளித்தபோது, அது அவரைத் திருப்திப்படுத்தியது. இருதய திருப்தி கர்த்தருடைய பிள்ளைகளுடைய வாழ்க்கையின் ஒரு சிறப்பான அம்சமாக இருக்க வேண்டும். நாம் அவருடைய வார்த்தையில் தரித்திருக்கும்போது, நாம் அதைச் சரியாக மதிப்பிடும் போது, நாம் அதை எல்லாவற்றிற்கும்மேலான காரியமாகக் கருதும்போது அவருடைய இருதயம் திருப்தி அடைகிறது. இதுதான் அவருடைய இருதயத்தைத் திருப்திப்படுத்துவதாகும். சபை கர்த்தருக்காக "அத்திப்பழங்களின் வீடாக" இருக்க வேண்டும்.

### சரிப்படுத்தப்பட்ட சேவை

அடுத்து, நாம் மார்த்தாளைப் பார்ப்போம். "*மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்தாள்.*" மூலமொழியாகிய கிரேக்க மொழி மிகப் பலமான வார்த்தைகளைம் பயன்படுத்துகிறது. அவள் அவரிடம்போய், அந்தக் காரியத்துக்குள் அவரை இழுத்தாள் என்பதே அதின் பொருள். அவர்தான் இதற்குப் பொறுப்பு என்று அவள் கருதினாள் என்பதை இது குறிப்பால் சுட்டிக்காட்டுகிறது. அவள் தன் மனதில் இருந்த எல்லாவற்றையும் சொல்லியிருந்தால், "நீர்தான் இதற்குப் பொறுப்பு. உமக்கு இதில் சம்பந்தம் இருக்கிறது. எனவே, நீர்தான் இதைச் சரிசெய்தாக வேண்டும்," என்று சொல்லியிருப்பாள். மூலமொழியில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தைகள் அதைத்தான் குறிக்கின்றன. அதில் சம்பந்தப்பட்டவர் என்ற முறையில், அவர் விரும்பினால் அவரால் இதைச் சரிசெய்ய முடியும் என்றும், அவர் இதைச் சரிசெய்ய வேண்டும் என்பதுபோல் அவள் கோபமாகம் பேசினாள் என்று இது குறிக்கிறது. அவள் இந்தக் காரியத்தைத் தனக்குள் அடக்கிவைத்திருந்தாள். ஆனால், அவளால் கடைசிவரை அடக்கிவைக்க முடியவில்லை. வெடித்துவிட்டாள்; அவள் அவரிடம் சென்று படபடவென்று எல்லாவற்றையும் கொட்டித்தீர்த்தாள். "*ஆம் டவரே, நான் தனியே*

*வேலை செய்யும்படி என் சகோதரி என்னை விட்டுவந்திருக்கிறதைகுறித்து உமக்குக் கவலையில் லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும்*,'' என்று அவள் கூறினாள்.

இங்கு இருக்கும் சூழ்நிலையை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அது மார்த்தாளைப் புரிந்துகொள்ள உங்களுக்கு உதவியாக இருக்கும். நாம் மார்த்தாளின் மனநிலையை யும், நிலைமையையும் புரிந்துகொள்ள வேண்டும். "*பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்த மடைந்து*'' என்ற வார்த்தைகள் அங்கு இருந்த உண்மையான சூழ்நிலையை நமக்குத் தெளிவாகத் தெரிவிக்கவில்லை. காரியங்கள் அங்கு துல்லியமாக எப்படி இருந்தன என்பதை நம் மொழிபெயர்ப் பில், தெள்ளத்தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. கொஞ்சம் குறைவாகத்தான் காண முடி கிறது என்று நான் நினைக்கிறேன். இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தைக்கு "வெவ்வேறு திசை களில் கவனத்தைச் சிதறடித்து'' அல்லது "வெவ்வேறு திசைகளில் இழுக்கப்பட்டு'' என்று பொருள். ஒருவேளை அவளுடைய கவலை அவளுடைய முகத்தில் தெரிந்திருக்கக்கூடும். அவள் எதைப்பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டிருந்தாள்? அநேக வீட்டு வேலைகள்; ஒருவேளை விதவிதமான உணவுப்பண் டங்கள். இம்படி பல்வேறு வகையான காரியங்களால் அவள் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தாள். கர்த்தர் மார்த்தாளை நோக்கி, "மார்த்தாளே, நீ இரண்டாந்தரமான காரியங்களைக்குறித்துக் கவலைப்படு கிறாய்; உன்னால் சமாளிக்க முடிந்ததைவிட நிறைய காரியங்கள் உன்னிடம் இருக்கின்றன. ஆனால், உண்மையாகவே தேவையான காரியம் ஒன்றேவொன்றுதான்...'' என்று கூறினார்.

நீங்கள் சூழ்நிலையைப் புரிந்துகொள்ள ஆரம்பித்துவிட்டீர்கள். இல்லையா? மார்த்தாள் அவளுடைய காரியங்களைச் சரிசெய்ய வேண்டியது அவசியமாயிருந்தது. காரியங்களைச் சரிசெய்யும்போதுதான், மிக முக்கியமான காரியத்துக்கு அதற்குரிய இடத்தைக் கொடுக்க முடியும். மார்த்தாள் அவர்களுக்கு உணவு தயாரித்தாள்; இந்தக் காரியத்தில் கர்த்தர் அவள்மேல் இரக்கப்படவில்லை என்று சொல்ல முடி யாது. மாறாக, உணவு தயாரிக்கும் காரியத்துக்கு அவள் அளவுக்கு அதிகமான இடத்தைக் கொடுத்து விட்டாள்; அதை ஒரு மிகம் பெரிய, பிரமாண்டமான வேலையாக்கிவிட்டாள்; மிக மிக முக்கியமான காரியங்களை முக்கியமில்லாத காரியங்களைவிடத் தாழ்வான இடத்திற்குத் தள்ளிவிட்டாள்; கர்த்தர் இதைக் கவனித்தார். உணவு தயாரிப்பது சரிதான். ஆனால், காரியங்களை நாம் அதினதின் இடத்தில் வைக்க வேண்டும். பூமிக்குரிய காரியங்கள் ஆவிக்குரிய காரியங்களை அமுக்கி மூழ்கடித்துவிடாத படிக்கு நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஆவிக்குரிய காரியங்களை மறைத்துவிடும் அளவுக்கு, கடந்துபோகிற காரியங்களைக்குறித்து நாம் கவலைப்படாமலும், அதில் நம் முழுக் கவனத்தையும் செலுத்தி திசைமாறிப்போகாமலும் இருப்போமாக. எல்லாக் காரியங்களும் அதினதின் இடத்தில் இருந்தால் நன்றாக இருக்கும். கர்த்தருடைய உதடுகளிலிருந்து வருகிற காரியம் மட்டும்தான் மற்ற எல்லாக் காரியங்களையும் அதினதின் இடத்தில் வைக்கும்.

இது விகிதத்தைப் பொறுத்த காரியம். இது நீங்கள் எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள் என் பதைப்பற்றிய காரியம். இது, நீங்கள் பெரிய காரியங்களுக்குக் கவனம்செலுத்தாதபடிக்கு, இந்த வாழ்க்கையின் காரியங்கள் உங்களைக் கவலையினால் நிரப்பி உங்களை மூழ்கடிக்கவும், ஆக்கிரமிக் கவும், இழுத்துக்கொள்ளவும் அனுமதிக்கிறீர்களா இல்லையா என்பதைப்பற்றிய காரியம். காரியத்தை நாம் இந்தக் கோணத்தில் பார்க்கும்போது, மரியாளைக்குறித்து நாம் நம் எஜமானரிடம் எந்தச் சண்டை யும்போட வேண்டிய அவசியம் இல்லை என்பதை நாமெல்லாரும் ஒப்புக்கொள்வோம். காரியங்களைக் கொஞ்சம் சரிசெய்ய வேண்டியது அவசியம். அப்போது, மற்ற காரியங்களுக்கும் ஓர் இடம், சரியான இடம், இருக்கும். காரியங்கள் அதினதின் இடத்திலும், அதினதின் விகிதத்திலும் இருக்க வேண்டும். ஒப்புயர்வற்ற காரியங்கள் உயர்வான இடத்தில் இருக்க வேண்டும். அவைகள் தாழ்வான காரியங்களில் மூழ்கிவிடக்கூடாது. தாழ்வான காரியங்கள் நிலையானவை அல்ல.

இதுதான் மொத்தச் சூழ்நிலையாகும். தேவனுடைய வீட்டில் எது முக்கியம்? நாம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைவிட, நாம் செய்கிற பரபரப்பான ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ வேலைகளைவிட, கர்த்தரை அறியவும், அவர் தம்மைத் தெரிவிக்க அவருக்கு வாய்ப்பளிப்பதுமே முக்கியமான காரியம். நாம் 'சபை' என்றழைக்கிற இடத்தில் நடக்கிற பரபரப்பான நடவடிக்கைகள் பெரும்பாலும் கர்த்த ருடைய சத்தத்தை வெளியே தள்ளிவிடுகின்றன, அவரை வெளியேற்றி கதவை அடைத்துவிடுகின்றன. இதைத்தான் நாம் செய்துகொண்டிருக்கிறோம். அவர் பேசுவதற்கு நாம் அவருக்கு அபூர்வமாகத்தான்

வாய்ப்பளிக்கிறோம். ஒப்புயர்வற்ற காரியங்களுக்காகச் சரிசெய்துகொள்கிற இடமே அவரைத் திருப்திப் படுத்துகிற இடம்.

அதுதான் மரியாள்.

**விலையேறம்பெற்ற தைலம் ஊற்றம்படுதல்**

இம்போது, நான்காவது காரியத்தைம் பார்க்க மத்தேயு 26:6-13க்குத் திரும்புவோம். அதே பெத்தானியா கிராமம். இங்கு "*விலையேறம்பெற்ற பரிமளதைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டுவரு கிற*" ஒரு பெம் ணைம் பார்க்கிறோம். இந்த நிகழ்ச்சி, முதன்முதலாக, கர்த்தராகிய இயேசுவின் மதிம்பை உணர்ந்துகொள்வதைம்பற்றிம் பேசுகிறது. கர்த்தராகிய இயேசுவின் மதிம்பை உணர்ந்து கொள்ளுதல். அதைம் பார்த்துக்கொண்டிருந்த எல்லாரும், "அவர் இதற்குத் தகுதியானவர் அல்ல," என்று நினைத்தார்கள். இதுதான் அவர்கள் சொன்னதின் பொருள். 'இதைம் பெறக்கூடிய அளவுக்கு அவர் மதிம்பு வாய்ந்தவர் அல்ல,' என்று அவர்கள் கருதினார்கள். நிச்சயமாக, அவர்கள் இம்படிம்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தவில்லை. ஆனால், அந்தம் பெண் அவருடைய மதிம்பை உணர்ந்து கொண்டாள். அவர் 'அளவிடமுடியாத விலையேறம்பெற்ற' மதிம்புடையவர் என்பதை அவள் உணர்ந் தாள். கிறிஸ்துவின் அளவிடமுடியாத விலையேறம்பெற்ற மதிம்பை நாம் இங்கு பார்க்கிறோம். இது தான் பிரதானமான அம்சம் என்று நான் நினைக்கிறேன். அது பெத்தானியாவின் ஓர் அம்சம்; அது மேலறையின் ஓர் அம்சம்; அது "என் சபையின்" ஓர் அம்சம்; அது கர்த்தருடைய சபையின் ஓர் அம் சம்; அது அவருடைய இருதயத்துக்கேற்ற மக்களின் ஓர் அம்சம்; அவருடைய அளவிடமுடியாத விலை யேறம்பெற்ற தன்மையை, அவருடைய அளவிடமுடியாத மதிப்பை, உணர்ந்துகொள்ளுதல்; அவ ருடைய பாதத்தில் வைக்கமுடியாது என்று சொல்லும் அளவுக்கு எதுவும் அவ்வளவு விலையேறம் பெற்றதல்ல. "*ஆகையால், விசுவாசிக்கிற உங்களுக்கு அவர் விலையேறம்பெற்றவர்* (1 பேதுரு 2:7).

இது மிக எளிமையானது. இரும்பினும், இது கர்த்தராகிய இயேசுவின்மேலுள்ள ஆழமான பாராட்டுதலை வெளியே கொம் டுவருகிற ஒரு காரியம்; இது மிகம் பிரியமான இந்தக் கிராமத்துக்குத் தனிச்சிறம்பைக் கொடுக்கிற ஒரு காரியம்; வேறு வார்த்தைகளில் சொல்வதானால், இது அவருடைய சபையை அவருடைய பார்வையில் மிக மதிம்புவாய்ந்ததாக மாற்றுகிற ஒரு காரியம்; எனவே, அங்கு அவருடைய மதிம்பு உணரம்படுகிறது, அவருடைய உண்மையான மதிம்பு அளவிடம்பட்டு, அவர் பாரட்டம்படுகிறார். இதுதான் அவருடைய வீட்டின் அடையாளமாக இருக்க வேண்டும். இது மேன் மேலும் வளர்க்கம்பட வேம் டிய ஓர் அம்சம். இது நாம் கவனிக்க வேண்டிய ஒரு காரியம். அம்படி கவனம் செலுத்தினால், கர்த்தராகிய இயேசுவின் விலையேறம்பெற்ற தன்மையையும், மதிம்பையும் பற்றிய உணர்வு நம்மிடம் எம்போதும் தயாராகவும், வளர்ந்துகொண்டும் இருக்கும். இது வெறுமனே சம்பிரதாயமான சபை அமைம்புமுறையிலிருந்து எவ்வளவு வித்தியாசமானது! இன்று அமைம்பு முறையின் தலையாகிய அம்சம் என்னவாக இருக்கிறது? கர்த்தராகிய இயேசுவின் தகுதியையும், மதிம்பையும் உண்மையாகவே இருதயத்தின் ஆழத்திலிருந்து பாராட்டுவதுதான் அந்த அமைம்பு முறையின் தலையாகிய அம்சம் என்று நாம் சொல்ல முடியுமா? அபூர்வமாகவே சொல்ல முடியும். இந்தம் பாராட்டு எங்கு இருக்கிறதோ, அங்கு சபை இருக்கிறது. இந்தம் பாராட்டு எங்கு இல்லையோ, படாடோபமான, விஸ்தாரமான, தடபுடலான மற்ற காட்சிகள் இருந்தாலுங்கூட, அங்கு சபை இல்லை; அது அவருடைய பேரின்பத்தின் இடம் அல்ல.

இங்கு நான் வேறொரு காரியத்தையும் பார்க்கிறேன். வெள்ளைக்கல் பரணியை உடைக்கும்போது, அதனுள் இருக்கும் தைலத்தின் விலையேறம்பெற்ற தன்மை வெளிவருகிறது. 'எளிதில் உடையக்கூடிய களிமண் பாத்திரம்' உடைக்கம்படும்போது, கிறிஸ்துவின் மகிமை வெளியரங்கமாகிறது, வெளிக் காண்பிக்கம்படுகிறது. அந்த வெள்ளைக்கல் பரணி முழுமையாகவும், பலமாகவும், தன்னில்தானே குறைவற்றதாகவும் இருக்கும்போது, நீங்கள் ஏதோவொன்றைம் பார்ம்பீர்கள், ஏதோவொன்று உங்கள் கவனத்தை ஈர்க்கும். அதைம் பார்த்தவுடன், "அது ஓர் அழகான குடுவை, ஓர் அற்புதமான வெள்ளைக் கல் பரணி" என்று சொல்லக்கூடும். நீங்கள் அதின் இரகசியத்தைம் பார்க்கவில்லை. நாம் குடுவைக்கு, வெள்ளைக்கல் பரணிக்கு, நம் முழுக் கவனத்தைச் செலுத்துவதுபோல், நாம் மனிதர்களைம் பார்க்கும் போது, அவர்கள் மிகச் சிறந்த அறிவாளிகள், மிகச் சிறந்தமனிதர்கள், அற்புதமான பிரசங்கிமார்கள்

என்று மட்டும் பார்க்கக்கூடும். ஆனால், இரகசியமோ முத்திரையிடம்பட்டு மூடம்பட்டிருக்கலாம், மறைந்திருக்கலாம். வெள்ளைக்கல்பரணி உடைக்கம்படும்போது, சுக்குநூறாக்கம்படும்போது, நீங்கள் கிறிஸ்துவினுடைய மகிமையின் உடன்படிக்கைம் பெட்டியின் இரகசியத்தைம் பார்க்கிறீர்கள். இதை நீங்கள் பவுலில் பார்க்கிறீர்கள். தர்சு பட்டணத்தானாகிய சவுல் அறிவுபூர்வமாகவும், ஒழுக்கரீதியாகவம், மதரீதியாகவும், அற்புதமான ஒரு வெள்ளைக்கல் பரணி என்று வைத்துக்கொள்வோம். தான் அம்படிம் பட்டவன் என்று அவரே கூறுகிறார். தான் என்னவாக இருந்தார் என்றும், எதில் மேன்மை பாராட்டினார் என்றும், மனிதர்கள் தன்னில் எதைம் பார்த்தும் புகழ்ந்தார்கள் என்றும் அவர் கூறுகிறார். ஆனால், அவன் நொறுக்கம்பட்டான். இனிமேல் சவுல் இல்லை; இனிமேல் பவுல் இல்லை. மாறாக, கிறிஸ்துவின் அழகும், மகிமையுமே. வெள்ளைக்கல் பரணி உடைக்கம்படும்போது, கிறிஸ்துவின் நறுமணம் வெளியே வருகிறது.

பிரியமானவர்களே, நம் அனுபவத்திலும் இம்படியே நடக்கிறது. சபை, உண்மையான சபை, நொறுக் கம்படுவதற்கு, மீண்டும் மீம் டும் நொறுக்கம்படுவதற்கு, கர்த்தர் அனுமதித்திருக்கிறார். அவயவங்கள் தனித்தனியாக உடைக்கம்படுவதற்கு, மீண்டும் மீண்டும் உடைக்கம்படுவதற்கு, அனுமதித்திருக்கிறார். ஆனால் இந்த உடைத்தல், நொறுக்குதல், தகர்த்தல் ஆகியவை சபைக்கும், தனிம்பட்ட நபர்களுக்கும், கிறிஸ்துவின் மகிமையின் வெளியாக்கத்தை அற்புதமான முறையில் கொண்டுவந்திருக்கிறது என்பதை வரலாறு நிரூபிக்கவில்லையா? அது அம்படித்தான். உடைக்கம்படுகிற ஒரு புதிய அனுபவத்தினூடாய் நாம் செல்கிறோம். சில வேளைகளில் நாம் இதை வேறு வார்த்தைகளில் சொல்கிறோம்: கிறிஸ்துவின் மரணத்துக்குள் நாம் இன்னும் ஆழமாகக் கொண்டுவரம்படுகிறோம், சிலுவையின் பசுமையான அனு பவத்துக்குள் வருகிறோம். நாம் அதை எம்படிச் சொன்னாலும் சரி, இதன் பொருள் உடைத்தல். இதன் பொருள் வெள்ளைக்கல்பரணி உடைக்கம்படுதல். ஆனால், பிரியமானவர்களே, இதன் பொருள் கிறிஸ்துவினுடைய மகிமையின் நிறைவான வெளியாக்கமும், அறிவும். இதன் விளைவாக நாம் அவரை இன்னும் புதிய முறையில் பாராட்டுவோம். நாம் உடைக்கம்படும் நேரத்தில் நாம் அவரைக் கண்டுபிடிம் போம். இதே முறையில்தான், சபை சிலுவைம் பாதையினூடாய்க் கடந்துசெல்கிறது. ஆனால், உடைக் கம்படுவதின்மூலம், கர்த்தராகிய இயேசுவின் மதிம்பிற்கு வருகிறது.

**அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை**

இம்போது நாம் யோவான் சுவிசேஷத்தின் பிரபலமான 11ஆம் அதிகாரத்துக்கும் போகிறோம். இங்கு நாம் மீண்டும் பெத்தானியாவைம் பார்க்கிறோம். இந்த முறை, லாசரு உயிரோடெழும்பம்படுதல் நம் கண்களுக்குமுன்பாக வருகிறது. நாம் முழுக் கதையையும். அதின் விவரங்களையும் பார்க்கம்போவ தில்லை. மாறாக, கடைசியில் கதை எம்படி முடிவடைகிறது என்பதை வேகமாகம் பார்ம்போம். இந்த நிகழ்ச்சியில், பெத்தானியா உயிர்த்தெழுந்த வல்லமை, உயிர்த்தெழுந்த ஜீவன், வெளியரங்கமாகிற காட்சியாக, மம் டலமாக, மாறுகிறது. இங்கு வேறு அநேகக் காரியங்களும் இருக்கின்றன. அன்பின் அற்புதமான வெளியாக்கம் இங்கு இருக்கிறது; இந்த அதிகாரத்தில் இங்கு ஐக்கியத்தின் அற்புதமான வெளியாக்கம் இருக்கிறது; பெத்தானியாவைவிட்டுத் தூரமாக இருந்தபோது, கர்த்தர் தம் சீடர்களை நோக்கி, “*நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான்,*” என்று கூறினார். “நம் நம் பன்.” “என் நம் பன்” அல்ல, மாறாக “நம் நண்பன்.” இது ஐக்கியம். “*இயேசு மார்த்தாளிடத்திலும், அவளுடைய சகோதரியினிடத்திலும், லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்.*” இது அன்பு. இவைக ளெல்லாம் பெத்தானியாவின் சிறம்புக்கள். ஆனால், அவருடைய உயிர்த்தெழுதலின், உயிர்த்தெழுந்த வல்லமையின், உயிர்த்தெழுந்த ஜீவனின், வெளியரங்கமே முதன்மையான சிறம்பாகும்.

இங்கு பெத்தானியா அவர் கட்டிக்கொண்டிருக்கிற சபைக்கு மீண்டும் ஓர் எடுத்துக்காட்டாகும். ‘சபை யின் நிருபம்’ என்று நாம் அழைக்கிற எபேசியர் நிருபத்திலிருந்து இதை நாம் அறிந்திருக்கிறோம். நாம் “*கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பிக்கப்பட்டோம்,*” என்பதைம் பார்க்கிறோம் (எபே. 2:5). சபை, அவருடைய உயிர்த்தெழுந்த வல்லமை காண்பிக்கம்படுகிற பாத்திரம். நாம் இந்த உண்மைக்கு, உபதேசத்துக்கு, சாட்சிபகர்வதோடு மட்டுமின்றி, கர்த்தருடைய மனதுக்கேற்ற சபை என்பது அவருடைய உயிர்த் தெழுந்த வல்லமையும், ஜீவனும் காண்பிக்கம்படுகிற இடம் என்பதைம் பரீட்சித்தும் பார்க்க வேண்டும்.

இதுபோன்ற காரியங்களைச் சொல்லும்போது, பெரும்பாலும், ஒரு காலியான உணர்வு நமக்கிருக்கிறது என்று எனக்குத் தெரியும். 'ஆம், நாம் கிறிஸ்துவுடனேகூட சிலுவையிலறையம்பட வேண்டும் என்பதைம்போல், அது அம்படித்தான் இருக்க *வேண்டும்* என்று எங்களுக்குத் தெரியும். நாம் கிறிஸ்துவுடனேகூட எழும்பம்பட வேண்டும் என்று எங்களுக்குத் தெரியும். அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய உயிர்த்தெழுந்த ஜீவனின் வல்லமையையும் நாம் அறிய வேண்டும் என்பது மிகவும் உம் மை.' இவ்வாறு நாம் மீண்டும் மீண்டும் கூறுகிறோம். ஆனால், இம்படிச் சொல்லிவிட்டு, அதை அம்படியே விட்டுவிடுகிறோம். அது எம்படி இருக்க வேண்டும் என்பதுதான் கேள்வி. தம் உயிர்த்தெழுதலின் வல்லமையை வெளிக்காண்பிக்க வேண்டும் என்ற குறிம்பிட்ட குறிக்கோளுக்காகவே கர்த்தர் தம் சபையை உருவாக்கியிருக்கிறார் என்பதை நாம் இம்போது உணர்ந்து, அந்த நோக்கத்திற்காக நாம் நம்மைக் கர்த்தருக்கு அர்ம்பணம் செய்ய வேண்டும். அதுதான் வழி: தம் உயிர்த்தெழுதலின் வல்லமையையும், ஜீவனையும் நம்மில் வெளிக்காண்பிக்க வேண்டும் என்பதே நாம் அந்த சபையில், அந்த சரீரத்தில், இரும்பதின் குறிக்கோளாகும் என்பதை நாம் உணரவேண்டும். அதை உணரும்போது, நாம் நம்மைக் கர்த்தருக்கு அர்ம்பணித்திருக்கிறோம் என்ற திட்டவட்டமான புரிந்துகொள்ளுதல் நம்மிடம் இருக்கிறது. இது நம் இருதயங்களிலிருந்து வந்திருந்தால், இம்போது நம் பொறும்பு இங்கு முடிந்து விடுகிறது, கர்த்தர் தம் வேலையை ஆரம்பிம்பார்.

நம்மை நாமே எம்படி சிலுவையிலறைய முடியாதோ, அதுபோல நம்மை நாமே உயிரொடெழும்ப முடியாது. இதை மனதில் வைத்துத்தான் கர்த்தர் நம்மோடு இடைம்படுகிறார் என்பதை நாம் உணர வேம்டும். அவர் தம் உயிர்த்தெழுதலின் வல்லமையை வெளிக்காண்பிக்க விரும்புகிறார். இதற்காகம் பல வேளைகளில் அவர் ஒரு குறிம்பிட்ட மனம்பாங்கு உள்ளவராக இருக்கிறார். நம்மைம் பொறுத்தவரையில், அதாவது, எந்த மனித வல்லமையாலும் காம்பாற்றவோ அல்லது சீர்ம்படுத்தவோ முடியாது என்ற அளவுக்கு அவர் காரியங்களைம் போக அனுமதிக்கிறார்; சூழ்நிலையைக் காம்பாற்றுவதற்கு இந்தம் பிரபஞ்சத்தில் எந்த வல்லமையாலும் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லும் அளவுக்கு அவர் காரியங்களைம் போகவிடுகிறார். இந்தம் பிரபஞ்சத்தில் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையைத்தவிர வேறொன்றினாலும் எந்தம் பயனும் இல்லை என்பதை உணரும் அளவுக்கு அவர் மரணத்தை, அழிவை, வேலை செய்ய அனுமதிம்பார்.

ஆபிரகாம் வந்த இடத்துக்கு நாமும் வருவோம். அவர் உயிர்த்தெழுதலுக்குள் நுழைந்து விசுவாசத் தின் பெரிய அடையாளமாக மாறினார். "*தன் சரீரம் இப்போது ஏறக்குறைய செத்துப்போனது என்று கருதினான்.*" (ரோமர் 4:19). "*ஏறக்குறைய செத்துப்போனது.*" அம்போஸ்தலனாகிய பவுல் ஆபிரகாமைம் பற்றிம் பேசும்போது இந்தம் பதத்தைம் பயன்படுத்துகிறார். பவுலும் இந்த அனுபவத்தின்வழியாகச் சென்றார். "*நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம்.*" (2 கொரி. 1:9). சிருஷ்டிப்பின் மண்டலத்தில் மனிதர்களால் என்னதான் செய்யமுடிந்தாலும், உண்மையாகவே மரணம் ஆட்கொண்டபின் அவர்கள் வல்லமையை இழந்துவிடுகிறார்கள்; அதற்கு மேல் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. உயிர்த்தெழுதல் தேவனுடைய செயல், தேவனுடையது மட்டுமே. மனிதர்களிடம் உயிர் இருக்கும்போது, அவர்களால் அநேகக் காரியங்களைச் செய்ய முடியும். ஆனால், அவர்களில் உயிர் இல்லையென்றால், தேவனால் மட்டுமே ஏதாவது செய்ய முடியும். தேவன் தம்மை வெளிக்காண்பிம்பதற்காக, தம்மைக் காட்சியாக்குவதற்காக, மனித உதவியால் ஒன்றுமே செய்ய முடியாது என்ற சூழ்நிலைக்குள் தம் சபையையும், அதின் அவயவங்களையும் அடிக்கடி போக அனுமதிம்பார். இந்தக் காட்சியில் மனிதனுடைய மகிமைக்கு இடமேயில்லை.

எனவே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, "*இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது; தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார்.*" மகிமைம்படுவார்! காரியங்களின் அந்தம் போக்குக்கு நாம் நம்மை அர்ம்பணித்திருக்கிறோம். அதாவது, மனித ஆற்றாமை என்ற எண்ணத்திற்கு நாம் நம்மை அர்ம்பணித்திருக்கிறோம். ஆனால், அது இந்த முடிவுக்கு வருவதை ஏற்றுக்கொள்வதில் நாம் எவ்வளவு மெதுவாக இருக்கிறோம். நம்புவதற்கு வழியே இல்லை என்னும் நிலைமைக்குக் காரியங்கள் நழுவிம்போகும்போது, நாம் கையைக் காலை உதைக்கிறோம்; எல்லாம் தவறாகம் போய்விட்டது என்று நினைக்க ஆரம்பிக்கிறோம். ஆனால், அது

தேவனுக்குச் சரியாகம் போய்க்கொண்டிருக்கக்கூடும்! ஆம், அது நம்பிக்கையற்ற நிலைமைதான்; அந்த எண்ணம் அந்த நம்பிக்கையற்ற நிலைமையிலிருந்து அதின் பயங்கரமான தன்மையை ம்க்குவ தில்லை. ஆனால், தம் தலையான சாட்சியை எழும்ப அது கர்த்தருக்கு உயர்வான ஒரு வாய்ம்பை அளித்தால், அது சரி. அதாவது, விளைவைம் பொறுத்தவரை அது சரி.

கடைசியாக, நித்தியத்தில், நாம் அவருடைய சரீரமாகிய சபையின் கதையை வாசிக்கும்போதும் சரி, அது என்னென்ன வழிகளினூடாய்க் கடந்துவந்திருக்கிறது என்பதைம் பார்க்கும்போதும் சரி, எந்த மனித நிறுவனமோ அல்லது மனிதன் உண்டாக்கிய ஒரு காரியமோ தாக்கும்பிடித்து நின்றிருக்க முடி யாது என்றும், பரிசுத்தவான்கள் கடந்துசென்ற பாதைகளினூடாய்ச் கடந்துசென்றிருக்கமுடியாது என் றும் நாம் அறிக்கைசெய்ய வேண்டியிருக்கும். இதை நித்தியத்தின் வெளிச்சத்தில் புரிந்துகொள்ளும் போதும், உண்மையான ஆவிக்குரிய தரங்களினால் மதிம்பிடும்போதும், சர்வ வல்லமையுள்ள தேவ னைத்தவிர வேறு யாரும் இதைச் சாதித்திருக்க முடியாது, இதைச் செய்து முடித்திருக்க முடியாது என்றும், அது "*அவருடைய வல்லமையின் அளவிடமுடியாத மகத்துவத்தின்*" (எபே. 1:19) வெளியாக்கத் தின் கருவியாக மாறிவிட்டது என்பதில் சந்தேகம் இல்லை என்றும் நாம் சொல்வோம். இது நிறையக் காரியங்களைம் பேசுகிறது. இதற்கு "*அவருடைய வல்லமையின் அளவிடமுடியாத மகத்துவமே*" தேவை யென்றால், நாம் எதிலிருந்து வெளியே கொண்டுவரம்பட வேண்டும் என்பது தெளிவாகிறது. இல் லையா? "*தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருந்தால்*" (1 கொரி. 1:25), "*அவருடைய வல்லமையின் அளவிடமுடியாத மகத்துவம். எவ்வளவு பெரிதாயிருக்கும்?*"

அது உயிர்த்தெழுதலில் இருக்கிறது. உங்களுக்குத் தெரிந்திரும்பதின்படி, வார்த்தைகள் உயிர்த்தெழு தலுடன் இணைக்கம்பட்டிருக்கின்றன: "*தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும்*" (எபே. 1:19). "*விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்தில்.*" இம்போது சபை, பெத்தானியா சாட்சி, அவருடைய உயிர்த் தெழுதலின் வல்லமைக்கு சாட்சியாக இருக்க வேண்டும். அவர் நம்மிடம் கையாளுகிற வழிகளுக்கு உயிர்த்தெழுதல் அவசியம் என்றால், தம் சபை எம்படி இருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்பு கிறாரோ அதின் உண்மையான வெளியாக்கமாக நாம் இரும்போம் என்ற உம் மையை நினைத்து நாம் உற்சாகமடைவோமாக, ஆறுதலடைவோமாக.

## அவருடைய வெற்றியைக் கொம் டாடுதல்

இம்போது, நாம் யோவான் 11ஆம் அதிகாரத்திலிருந்து 12ஆம் அதிகாரத்திற்கும் போகிறோம். "*பஸ்கா பண்டிகை வர ஆறு நாளைக்குமுன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார். அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள்; மார்த்தாள் பணிவிடை செய்தாள்;* (கர்த்தர் மார்த்தாளிடம் பேசியதிலிருந்து, பணிவிடைசெய்வது தவறு என்று இயேசு சொல்லு கிறார் என்று அவள் நினைக்கவில்லை; அவள் இன்னும் பணிவிடைசெய்துகொண்டிருக்கிறாள்—அது இம்போது சரி) *லாசரும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான். அப்பொழுது மரியாள் விலையேறம்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது.*"

இங்கு ஒரு விருந்து கொடுக்கம்படுகிறது. அந்த விருந்தில் பல அம்சங்கள் இருக்கின்றன. மரியாளும், அவளுடைய செயலும் குறிம்பதுபோல, ஓர் அம்சம் ஆராதனையைம்பற்றிம் பேசுகிறது. இங்கு நம் கண்களுக்குமுன்பாக இரும்பது இயேசுவின்மேல் உள்ள பாராட்டு. இதுவே ஆராதனை. தேவனுடைய எண்ணத்தின்படி, ஆராதனை என்பது கர்த்தராகிய இயேசுவைம் பாராட்டுவதே. ஆராதனை என்பது தேவனுடைய குமாரனை இருதயத்தின் ஆழத்திலிருந்து பாராட்டுகிற இனிய நறுமணத்தைத் தேவ னுக்குமுன் கொண்டுவருவதாகும். இது எளிமையானதுபோல் தோன்றலாம். ஆனால், மிகத் தூய்மை யான ஆராதனை என்பது கர்த்தராகிய இயேசுவைம்பற்றி நாம் என்ன நினைக்கிறோமோ, அதைம் பிதாவுக்குமுன் வெளியாக்குவதாகும். அதுதான் ஆராதனை. சபை அதற்காக இருக்கிறது. பெத்தானியா அதைம்பற்றிம் பேசுகிறது.

மார்த்தாள், ஆம் மார்த்தாள், பணிவிடைசெய்தாள். ஆனால், இம்போது அது சரிசெய்யம்பட்ட பணி விடை. அவள் இன்னும் பணிவிடைசெய்துகொண்டிருக்கிறாள். ஆனால், அவள் இம்போது செய்வது சரி. இங்கு கர்த்தர் அவளைக் கடிந்துகொள்ளவில்லை. இம்போது அவளுடைய முகம் கவலையினால் வாடிம்போக வில்லை. அவள் இங்கு பற்பல வேலைகளில் மூழ்கி வருத்தம்படவில்லை. அவள் உயிர்த் தெழுந்த வீட்டில் பணிவிடைசெய்துகொண்டிருக்கிறாள். இங்கு சரிசெய்யம்பட்ட பணிவிடையைம் பார்க் கிறோம். பணிவிடை ஆராதனையோடு ஐக்கியம்பட்டும், ஆராதனையோடு சரியான விகிதத்திலும் இருக்கும்போது, கர்த்தருடைய வீட்டில் செய்யம்படும் பணிவிடை அவருடைய மனதுக்கு முற்றிலும் ஏற்புடைய பணிவிடையாக இருக்கும். இம்போது சகோதரிகளுக்கிடையே இணக்கம் இருக்கிறது. முன்பு, அவர்கள் இணைக்கம்படாமல் இருந்தார்கள். ஏனென்றால், காரியங்களுக்கு அதினதின் விகிதம் கொடுக்கம்படவில்லை, காரியங்கள் அதினதின் இடத்தில் இருக்கவில்லை. இம்போது காரியங்கள் சரிசெய்யம்பட்டுவிட்டன. எனவே, அவர்கள் எம்போதும் சேர்ந்தே செல்கிறார்கள். இது சரி செய்யம்பட்ட பணிவிடை.

லாசரு விருந்தில் இருந்தான். நிச்சயமாக, அவன் ஜீவனின், உயிர்த்தெழுந்த ஜீவனின், கோட்பாடு. மீண்டும், அது கர்த்தருடைய வீட்டின் ஓர் அடையாளமாகும். எனவே, இங்கு ஆராதனையும், சரிசெய் யம்பட்ட பணிவிடையும், உயிர்த்தெழுந்த ஜீவனும் இருக்கின்றன.

ஆனால், கெட்ட நோக்கமுடைய காரியம் எம்போதும் அதிக தூரத்தில் இருக்காது. "*இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன?*' கர்த்தர் விரும்புவதுபோன்ற சபையை நீங்கள் பெறும்போது, பிசாசு மிக அருகில் பதுங்கியிரும்பதை ம்ங்கள் எம்போதும் காண் பீர்கள். அது சபைக்கு ஒரு பாராட்டாகக்கூட இருக்கக்கூடும். ஏனென்றால், பிசாசானவன் பொறாமை யுடன் பார்க்காத எதுவும், நிச்சயமாக, கர்த்தருடைய இருதயத்தைத் திரும்திம்படுத்துகிறதாக இருக் காது. ஆனால், இது எம்போதும் அம்படித்தான் இருக்கிறது. கர்த்தருடைய இருதயத்துக்கேற்ற ஒன் றைம் பெற்றவுடன், அந்த ஆராதனையை அழிக்க வேண்டும், கர்த்தர்மேலுள்ள பாராட்டுதலிலிருந்து திசைதிரும்ப வேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் பிசாசானவன் சுற்றிவருவதை நீங்கள் பார்ம் பீர்கள். அது சபையின் ஒரு தனிச்சிறம்பாக மாறிவிடுகிறது. எனவே, கர்த்தர் பெற்றுக்கொண்டிரும் பதைம் பிசாசானவன் பொறாமையுடன் பார்க்க ஆரம்பித்துவிடுகிறான். அவன் அதைத் தனதாக்கிக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறான்.

கர்த்தராகிய இயேசுவுக்குரியதை அவரிடம் கொண்டுவருதே சபை. அதை அவரிடமிருந்து திருடிக் கொள்ள பிசாசானவன் ஆரம்பத்திலிருந்து போராடிக்கொண்டிருக்கிறான். தன்னால் முடிந்தால், அவன் இதை சபையில் செய்வான். ஏனென்றால், சபை என்பது கர்த்தருடைய இருதயம் எதை நாடுகிறதோ அதைம் பெற்றுக்கொள்கிற இடம்.

### வெளியேயும், மேல்நோக்கியும்

இம்போது லூக்கா 24:50-52இல் உள்ள கடைசிக் காரியத்தைம் பார்த்து முடித்துக்கொள்வோம். *"பின்பு அவர் பெத்தானியாவரைக்கும் அவர்களை அழைத்துக்கொண்டுபோய், தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் அவரைப் பணிந்துகொண்டு, மிகுந்த சந்தோஷத் தோடே எருசலேமுக்குத் திரும்பினார்கள்."*

மூன்று வார்த்தைகள்: "*அழைத்துக்கொண்டு போனார்,*" "*ஆசீர்வதித்தார்,*" "*எடுத்துக்கொள்ளப்பட் டார்.*" கர்த்தரோடு வெளியே, அவருடைய இடத்தில் தனியாக; அவருடைய ஆசீர்வாதத்தின்கீழ்; பர லோகத்தில் இருக்கும் அவருடன் இணைக்கம்படுதல். பவுலில் வார்த்தைகளைம் பயன்படுத்துவ தானால் "*உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.*"

அதுதான் பெத்தானியா, அதுதான் சபை, இன்று கர்த்தர் தம் மக்களின் வாழ்க்கையில் இதைத்ததான் கொண்டிருக்க விரும்புகிறார்.

மீண்டும் மீண்டும் பெத்தானியாவைம்பற்றிய காரியங்களைம் பார்த்து, உங்கள் இருதயத்தை இந்தக் காரியங்களில் ஆழமாக மூழ்கவிட்டு, கர்த்தருடைய மனதுக்கேற்ற இந்த அம்சங்கள் உங்களில் இருக்கு

மாறு திட்டவட்டமாகத் தேடுங்கள். நாம் தனிம்பட்ட முறையில் என்ன செய்கிறோமோ, அவை களை நாம் இணைந்திருக்கும் சபைகளில், ஐக்கியங்களில், செய்வோமாக. அம்போது, அங்கு உம் மையான பெத்தானியாக்கள், தேவனுடைய பெரிய நகரமாகிய பரம எருசலேமின் கிராம வெளியாக்கம், இருக் கும்.